**செய்தி வெளியீடு எண்.256** **நாள்.4.4.2008**

# பெருமழை சேதத்திற்கு நிவாரண நிதியாக 175 கோடி ரூபாய் !

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெய்த எதிர்பாராத பெருமழை காரணமாக விவசாயப் பயிர்கள் சேதமும், உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளன. இம்மழையினால் ஏறக்குறைய 47 ஆயிரம் எக்டேர் நெற்பயிர் மற்றும் இதர பயிர்களும் சேதமடைந்ததுடன்; 24 பேர் உயிரிழந்தனர். 800–க்கும் மேற்பட்ட கால்நடைகளின் உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளது. இப்பெருமழையினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த மதிப்பீடுகள் அடங்கிய அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதற்கிடையே பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் வழங்கி அரசு 25.3.2008 அன்று ஆணையிட்டுள்ளது. மேலும் இப்பெருமழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிடும் பொருட்டு சேதமடைந்த நெற்பயிருக்கு ஒரு எக்டேருக்கு ரூ.4,000/– என்று தற்பொழுது வழங்கப்படும் நிவாரணத் தொகையினை ரூ.7,500/– என உயர்த்தி வழங்கவும், 2 எக்டேர் அளவிற்கு தான் வழங்க வேண்டும் என தற்பொழுதுள்ள வரம்பினை தளர்த்தி பாதிக்கப்பட்ட நிலம் எத்தனை எக்டேராக இருந்தாலும் அனைத்து நிலத்திற்கும், அனைத்துப் பயிர்களுக்கும் நிவாரண உதவி அளித்திடவும் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் கால்நடைகள் இழப்பிற்கு நிவாரணம் வழங்க தற்பொழுது நடைமுறையில் உள்ள எண்ணிக்கை குறித்த உச்சவரம்பினை தளர்த்தி இறந்து போன அனைத்து கால்நடைகளுக்கும் நிவாரணம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழக அரசின் கோரிக்கை அடிப்படையில், பாதிப்படைந்த பகுதிகளை பார்வையிட்டு, உரிய உதவி வழங்குவதற்குப் பரிந்துரை செய்வதற்காக நான்கு உறுப்பினர்கள் கொண்ட குழுவினை மத்திய அரசு அனுப்பிட உள்ளது. இக்குழு 6.4.2008 முதல் 9.4.2008 வரை பாதிப்படைந்த பகுதிகளை ஆய்வு செய்யும்.

பாதிப்படைந்த விவசாயிகள், கால்நடைகளை இழந்து தவித்திடும் குடும்பங்கள் மற்றும் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட 100 கோடி ரூபாயுடன், கூடுதலாக 75 கோடி ரூபாய் ஆக மொத்தம் 175 கோடி ரூபாய் நிவாரண உதவியாக வழங்கிட முடிவு செய்து முதலமைச்சர் கலைஞர் இன்று (4.4.2008) ஆணையிட்டுள்ளார்.

*****

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.